**01.11.2023. அ.வ.எண்.2/2009 மற்றும் 317/2008 வா.சா.1 பாலமுருகன், த/பெ.மண்ணாங்கட்டி**

**குறுக்கு விசாரணை, அ.வ.எண்.2/2009 ன் 2ம் பிரதிவாதி மற்றும் 317/2008ன் வாதிகள் தரப்பு**

அ.வ. எண.2/2009 வழக்கை என் தந்தை தாக்கல் செய்துள்ளார். எதற்காக அந்த வழக்கை தாக்கல் செய்தார் என்று கேட்டால் அந்த வழக்கு சொத்து எங்களது அனுபவத்தில் உள்ளது என வழக்கு தாக்கல் செய்துள்ளார். என் தந்தை கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. அந்த சொத்தை என் தந்தை விமலாஅம்மாளிடம் கிரையம் வாங்கினார். அந்த சொத்திற்கு கிழக்கில் குட்டையும், மேற்கில் கால்வாயும், தெற்கில் மணவாளன் நிலமும் உள்ளது. வடக்கில் உள்ளவர் பெயர் தெரியவில்லை. விமலா அம்மாள் யாரிடம் அந்த சொத்தை கிரையம் வாங்கினார் என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் இல்லை. விமலா அம்மாள் சொத்திற்கு உரிமையாளர் அல்ல என்றும், ஆனால், அதுபோல விமலா அம்மாளும், என் தந்தையும் கிரைய ஆவணத்தை உருவாக்கி உள்ளனர் என்றும், சொன்னால் அது சரியல்ல. என் தந்தைக்கு நானும், என் சகோதரர் ராஜேஷ் என்பவரும், மகன்கள் ஆவோம். நாங்கள் இருவரும் சேர்ந்து தான் வழக்கை நடத்துகிறோம் என்பது சரிதான். அ.வ.எண்.2/2009 வழக்கை என் தந்தை தாக்கல் செய்யும் முன்னரே அந்த வழக்கு 1, 3 பிரதிவாதிகள் என் தந்தைக்கு எதிராகவும், மற்றும் மூவருக்கும் எதிராகவும், அ.வ.எண்.317/2008 வழக்கை தாக்கல் செய்து வழக்கு சொத்து தங்களுக்கே சொந்தம் என உரிமை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களை கோரி இருந்தனர் என்றால், அந்த விவரம் எனக்கு தெரியாது. அ.வ.எண்.317/2008 வழக்கின் சொத்திற்கு தான் என் தந்தை அ.வ.எண்.2./2009 வழக்கை தாக்கல் செய்தார் என்பது சரிதான். அ.வ.எண்.317/2008 வழக்கு தாக்கல் செய்யும் முன்னர் என் தந்தைக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால், அது விவரம் எனக்கு தெரியாது. என் தந்தை பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று சொன்னால் அதுவும் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து குணாஅம்மாளின் முதாதையர் சொத்து என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து விமலாஅம்மாளுக்கு பாத்தியமாக இருந்தது என காட்ட என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்று கேட்டால் என் தந்தை பெயரிலும், விமலாஅம்மாளின் பெயரிலும் உள்ள கூட்டு பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து தற்பொழுது எங்களது அனுபவத்தில் உள்ளது. அதில் கடந்த 2 வருடங்களாக பயிரி வைக்கவில்லை. 2 வருடங்களுக்கு முன்னர் என்ன பயிரி வைத்தோம் என கேட்டால் அதற்கு முன்னரும், வழக்கு சொத்தில் முள்வெளிமரங்கள் தான் இருந்தது, எப்பொழுது பயிர் வைத்தோம் என்பது ஞாபகம் இல்லை. என் தந்தை பயிர் வைத்தாரா என்ன பயிர் வைத்தார் என கேட்டால் 2 முறை வேர்கடலை பயிர் வைத்தார். அவர் பயிர் வைத்தது சுமார் 23 வருடங்களுக்கு முன்பு இருக்கும். அ.சா.ஆ.4 முதல் 6 மற்றும் 12 முதல் 19 வரை உள்ள அடங்கல் கணக்கில் வழக்கு சொத்தில் பயிர் செய்யப்பட்டதாக குறிப்புகள் இல்லை என்றால், நான் வெளியூரில் வசித்தேன் அதனால், விவரம் எனக்கு தெரியாது. என் தந்தையோ, அல்லது நானோ, எந்த காலத்திலும் வழக்கு சொத்தில் பயிர் வைத்தது இல்லை என்றும், குணாஅம்மாள் சென்னையில் வசிப்பதால், வழக்கு சொத்து நெடுங்காலமாக தரிசாக தான் உள்ளது என்றும், சொன்னால் அது சரியல்ல.

**மறு விசாரணை:- இல்லை**